Department Sabaragamuwa Province/ Weekly School Department of Education,Sabaragamuwa Province/ Weekly School Department of Education,Sabaragamuwa Province/ Weekly School

மாகாணக் கல்வித் திணைக்களம் - சபரகமுவ

வாராந்த பாடசாலை

தமிழ்மொழியும் இலக்கியமும்

வாரம் 03

தரம் 10

R. கமலதாஸ் - சாந்த மரியாள் த.ம.வி

## தரம் - 10

## அலகு 07 –நாட்டார் பாடல்கள்

1. "பட்டி பெருக வேணும் தம்பிரானே
   பாற்பானைபொங்கவேண்டும்..."

   அ. இங்கு தம்பிரான் எனப்படும் கடவுள் யார்?
   ………………………………………………………………………………………………
   ஆ. இப் பாடல் எத்தலைப்பில் இடம்பெற்றுள்ளது?

   ………………………………………………………………………………………………

2. "மேழி பெருக வேணும் தம்பிரானே
   மேதினியோர் வாழ வேண்டும்..."

   அ. மேழி என்பது உணர்த்தும் பொருள் யாது?
   ………………………………………………………………………………………………
   ஆ. மேதினி என்பதன் பொருள் யாது?
   ………………………………………………………………………………………………

3. "கண்ணூறு படாமற் காரும் ஐயனாரே...
   நாவூறு வராமற் காரும் ஐயனாரே…"

   அ. இங்கு கண்ணூறு என்பதன் பொருள் யாது?

   ………………………………………………………………………………………………
   ஆ. இங்கு நாவாறு என்பதன் பொருள் யாது?

   ………………………………………………………………………………………………

3. "ஆசைக் கிளியே என்ர ஆசியத்து உம்மாவே
   ஓசைக் குரல்லே.."

   அ. இங்கு ஆசியத்து உம்மாஎனக் குறிக்கப்படுவது யாது?
   ………………………………………………………………………………………………
   ஆ. இக் கூற்று யாரால் உரைக்கப்பட்டுள்ளது?

   ………………………………………………………………………………………………

4. "மாமி மகளே என்ர மருதக்கிளி வங்கிசமே
   ஏலங்கிராம்பே..."

   அ. வங்கிசம் என்பது உணர்த்தும் கருத்து யாது?
   ………………………………………………………………………………………………

பக் 2ஐ பார்க்க

ஆ. மாமி மகளே என்பதன் ஊடாக வெளிப்படுத்தப்படும் உறவுமுறை யாது?

………………………………………………………………………………………………

6. “அல்லா மேல் ஆனை உன்னை அடையாட்டி காட்டுப்பள்ளி…”

அ. காட்டுப்பள்ளி என்பதன் பொருள் யாது?

………………………………………………………………………………………………

ஆ. இவ்வரிகளில் காதலனின் எத்தகு மனநிலை புலப்படுகின்றது?

………………………………………………………………………………………………

7. “சீனத்து செப்பே என்ர சிங்காரப் பூநிலவே…”

அ. இங்கு காதலன் தன் காதலியை எவ்வாறு வர்ணிக்கின்றான்?

………………………………………………………………………………………………

ஆ. இவ்வடிகளில் வெளிப்படும் அணியாது?

………………………………………………………………………………………………

8. “கடலே நீ இரையாதே காற்றே நீ வீசாதே நிலவே

நீ எறியாதே என்ர நீல வண்டு போய்ச் சேருமட்டும்…”

அ. இவ்வடிகளின் வாயிலாக காதலனின் எத்தகு உணர்வு வெளிப்படுகின்றது?

………………………………………………………………………………………………

ஆ. நிலவே நீ எறியாதே.. என காதலன் உரைக்கக் காரணம் யாது?

………………………………………………………………………………………………………………

………………………………………………………………………………………………………………

9. இப் பாடலில் காதலன் தன் காதலியை எவ்வாறான பெயர்களைக் கூறி அழைக்கின்றான்?

………………………………………………………………………………………………………………..

………………………………………………………………………………………………………………..

………………………………………………………………………………………………………………..

## கட்டமைப்புவினாக்கள்

1. **ஏர்ப்பாடலை**அடிப்படையாகக் கொண்டு பின்வருவனவற்றை விளக்குக

(அ) ஏர்ப்பாடலில், கிராமத்தவர் மீதான பரந்த மனப்பாங்கு எவ்வாறு வெளிப்படுகின்றது? சிவபெருமானிடம் வேண்டப்படுபவை யாவை?

(ஆ) பாற்பானை பொங்க வேண்டும். மற்றும் மேழி பெருக வேண்டும் எனும் தொடர்களில் வெளிப்படும் சிறப்பு யாது?

(இ) இப்பாடலில் வெளிப்படுத்தப்படும் மக்களின் வாழ்வியல் அம்சங்கள் எவை?

2. **அரிவிவெட்டும் பாடலை** அடிப்படையாகக் கொாண்டு,

(அ) அரிவி வெட்டும் இளைஞரை உவமிக்கப்பட்டுள்ள பொருத்தப்பாட்டினை ஆராய்க.

(ஆ) அரிவி வெட்டும் இளைஞர்கள் பயன்படுத்தும் அரிவாளின் தன்மையினை விளக்குக.

3. **மீனவர் பாடலினை** அடிப்படையாகக் கொண்டு பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

(அ) “உலகில் உள்ள ஒவ்வொன்றும் ஏதோ ஒன்றினை நம்பியே வாழ்க்கை நடத்துகின்றது” இக்கூற்றின் பொருத்தப்பாட்டினை விளக்குக.

(ஆ) கடலினை பாடுவதாகஅமையப்பெற்ற இப்பாடலில் காதல் வெளிப்பாடு எவ்வாறு அமைந்துள்ளது?

(இ) கடலின் மீது வெளிப்படும் அன்பில் தலைவியின் மீதான காதலும் மறைமுகமாக புலப்படுகின்றது”ஆராய்க.

பக் 3ஐ பார்க்க

4. **காதல் பாடலை** அடிப்படையாக்கொண்டு,

(அ) காதலன் தன் காதலி மீது கொண்ட அதீத அன்பு எவ்வாறு புலப்படுகின்றது?

(ஆ) இப் பாடலில் இழையோடியிருக்கும் வாழ்வியல் பண்புகளை எடுத்துரைக்க?

## இலக்கணம்
## (ஐந்தாம் ஆறாம் வேற்றுமைகள்)

1. ஐந்தாம், ஆறாம் வேற்றுமை உருபுகள் எவை?

………………………………………………………………………………….

2. உடைமைப்பொருள் எத்தனை வகைகளாகப் பிரிக்கலாம்? அவை எவை?

………………………………………………………………………………………………………

………………………………………………………………………………………………………

3. பின்வரும் வாக்கியங்களில் இடம்பெற்றுள்ள சொல்லுருபுகள் யாவை?

(அ) மரத்திலிருந்து விழுந்தான்.

…………………………………………………………………………………

(ஆ) என்னுடைய ஆசிரியர்.

………………………………………………………………………………..

(இ) செயற்கையை விட இயற்கை அழகானது.

……………………………………………………………………………….

(ஈ) கம்பனைப் பார்க்கிலும் பாரதி சமூகபிரக்ஞையுடன் கவிதைகளை எழுதியுள்ளான்.

……………………………………………………………………………….

(உ) கட்டுரையைக் காட்டிலும் கவிதையைப் பலரும் வாசிக்கின்றனர்.

………………………………………………………………………………